WMC
කාන්තාව සහ මාධ්‍ය සාමූහිකය
பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
Women and Media Collective

SSA SOCIAL SCIENTISTS' ASSOCIATION

## கருத்தேற்பு பற்றிய முன்னோட்டக் குறிப்பும் ஆய்வறிக்கைகளைக் கோருதலும்

இலங்கையிலுள்ள சமூக விஞ்ஞானிகள் கழகத்தின் ஒத்துழைப்புடன், பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# தெற்காசியாவில் ஊதியமற்ற பராமரிப்புப் பணி மற்றும் பெண்களின் உழைப்பு என்பவற்றை அங்கீகரிப்பதில் சமத்துவம் மற்றும் ஒப்புரவு பற்றிய மாநாடு

**காலம்:** 2022 மே 25-26

**இடம்:** இலங்கையில் வதிபவர்களுக்கு கொழும்பிலும், ஏனையவர்களுக்கு ஒன்லைன் மூலமாகவும்.

**பங்குபற்றுனர்கள்:** ஆய்வாளர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் தெற்காசியாவில் ஊதியமற்ற பராமரிப்புப் பணி பற்றி ஆதரித்துவாதிடுவோர்.

**சுருக்கங்களை சமர்ப்பிப்பு காலக்கெடு மார்ச் 28 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது**

## மாநாடு பற்றிய விபரங்கள்

பெண்களின் பணி, பால்நிலை மற்றும் அரசியற் பொருளாதாரம் பற்றியும், குறிப்பாக ஊதியமற்ற பராமரிப்புப் பணி பற்றியும் பணியாற்றுகின்ற ஆய்வாளர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரித்துவாதிடுநர்கள் இம்மாநாட்டில் பங்குபற்றுனர்களாகக் கலந்துகொள்ள விண்ணப்பிக்குமாறு அழைக்கப்படுகின்றனர். தெற்காசியாவில் ஊதியமற்ற பராமரிப்புப் பணியை அங்கீகரித்தல் எனும் தொனிப்பொருளில் தமது ஆய்வுகளை முன்வைக்கவுள்ள நூலாசிரியர்களையும் அத்துடன் அத்தொனிப்பொருள் பற்றிய கலந்துரையாடலுக்கு வழிசமைக்கவுள்ள நிபுணர் குழாத்தினரையும் உள்ளடக்கியதாக இம்மாநாடு அமையவுள்ளது.

மாநாட்டில் பங்குபற்ற விரும்பும் எல்லா பங்குபற்றுனர்களும் 2022.03.20 ஆம் திகதிக்கு முன்னர் தமது ஆய்வுச் சுருக்கத்தைச் பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்புக்குச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இதுபற்றிய தகவல்களுக்கு https://womenandmedia.org/conference எனும் இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

## ஆய்வறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

தயவுசெய்து ஆய்வுச் சுருக்கமொன்றை ஒரு தற்காலிக தலைப்புடன் சமர்ப்பிக்கவும். முழு ஆய்வறிக்கையையும் சமர்ப்பிப்பதற்காக ஓர் ஆய்வுச் சுருக்கம் தெரிவுசெய்யப்படுவதானது, அந்த ஆய்வறிக்கை தெற்காசியாவில் ஊதியமற்ற பராமரிப்புப் பணி பற்றிய வெளியீட்டின் விசேட பதிப்புக்கு தெரிவுசெய்யப்படுவதற்கான உத்தரவாதமாக அமையாது.

*இறுதி ஆய்வுச் பிரதிகள் 20 பங்கங்களுக்கு (இரட்டை இடைவெளியிடப்பட்டு) மேற்படுதல் ஆகாது. உசாத்துணைக்காக யீயு குறிப்பீட்டு வடிவம் (APA referencing style) கண்டிப்பாகப் பின்பற்றப்படுதல் வேண்டும். எல்லா கையெழுத்துப் பிரதிகளும் கருத்துத் திருட்டு (plagiarism) பற்றிய சோதனைக்கும் முழுமையான மீளாய்வுச் செயன்முறைக்கும் உட்படுத்தப்படும்.

* முன்மொழிவுகளும் சமர்ப்பணங்களும் ஒன்லைன் மூலமாகவே மேற்கொள்ளப்பட வேண்டும். இதுபற்றிய தகவல்களுக்கு https://womenandmedia.org/conference

## காலவரையறைகள்

| | |
|---|---|
| 28 மார்ச் | ஆய்வுச் சுருக்கத்தைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி |
| 31 மார்ச் | ஆய்வுச் சுருக்கத்தின் ஏற்புடைமை பற்றிய அறிவித்தல் மற்றும் முன்வைப்புக்கான அழைப்பு |
| 30 ஏப்ரல் | முழுமையான ஆய்வறிக்கை பிரதிகளைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி |
| 10 மே | திருத்தியமைக்கப்பட்ட ஆய்வறிக்கையின் இறுதி சமர்ப்பிப்பு |

## எதிர்பார்க்கப்படும் விளைவுகள்

i. ஊதியமற்ற பராமரிப்புப் பணியை அங்கீகரித்தல், குறைத்தல் மற்றும் மீள்விநியோகித்தல் ஆகியன தொடர்பில் தற்போதுள்ள சவால்களையும் மூலோபாயங்களையும் அடையாளம் காணுதல்.
ii. பின்தொடர் கண்காணிப்புச் செயற்பாடுகளுக்கான பங்காண்மைகள் மற்றும் ஊதியமற்ற பராமரிப்புப் பணியின் அங்கீகாரம் அத்துடன் அதுபற்றிய அதிகரித்த ஆதரித்துவாதிடல் என்பவற்றுக்கான மூலோபாயங்கள்.
iii. ஊதியமற்ற பராமரிப்புப் பணி பற்றிய தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வறிக்கைகளை வெளியீடு செய்தல்.

## குறிக்கோள்

மேற்குறிப்பிடப்பட்ட பிரச்சினைகள் பற்றிய பகுப்பாய்வுகளையும் பிரதிபலிப்பையும் ஊக்குவிக்கும் நோக்குடன், இந்த மாநாடானது பின்வரும் விடயப்பரப்புக்களில் குறிப்பான கவனத்தைச் செலுத்தி, தெற்காசியாவில் ஊதியமற்ற பராமரிப்புப் பணி மீதான கொள்கைசார் இடையீடுகளுக்கான ஆய்வு முடிவுகள், அறியப்பெற்ற ஆதரித்துவாதிடல் மற்றும் மூலோபாயங்கள் ஆகியன பற்றிய முன்வைப்புக்கும் கலந்துரையாடலுக்குமான கருத்துக்களம் ஒன்றை வழங்கவுள்ளது:

i. ஊதியமற்ற பராமரிப்புப் பணியின் அரசியற் பொருளாதாரம்.
ii. நேரப் பயன்பாட்டு கருத்தாய்வுகள் மற்றும் ஊதியமற்ற பராமரிப்புப் பணியை மதிப்பிடுதல்.
iii. அரசாங்கக் கொள்கைசார் இடையீடுகள்.
iv. ஆய்வாளர்கள், ஆதரித்துவாதிடுநர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கிடையே கூட்டணியை உருவாக்குதல்.
v. சமூக ஊடக இடையீடுகளும், அங்கீகாரம் மற்றும் கவனத்துடனான பங்குபற்றுகைக்கான தாக்கமும்.
vi. கொவிட்-19 இன் தாக்கங்களும் பராமரிப்புப் பணியின் அரசியற் பொருளாதாரத்தை மீள்கட்டமைப்பதற்கான மூலோபாயங்களும்.

## பின்னணி

குடும்பப் பராமரிப்புப் பணி என்பது பல பரிமாணங்களைக் கொண்டது. இப்பணி, தனிநபர்களின் எண்ணிக்கை, அவர்களின் வயது, தேவைகள் அல்லது குடும்ப உறுப்பினர்களின் பால்நிலை ஆகியவற்றைப் பொருட்படுத்தாது அக்குடும்பத்தின் சமூகக் கலாசாரக் கட்டமைப்புடன் பின்னிப் பிணைந்துள்ளது. ஒரு கருத்தேற்பு மற்றும் செயற்பாடு என்ற அடிப்படையில் பராமரிப்புப் பணி பெண்களுடன் இணைந்ததாகவும், பாரியளவில் பெண்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகவும் காணப்படுகின்றது. கடந்த மூன்று தசாப்தங்களாக, குடும்பத்துக்குள்ளான பராமரிப்பின் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார பொருத்தப்பாட்டை அங்கீகரித்தல் பற்றிய கவனக்குவிவானது பால்நிலைமயப்படுத்தப்பட்ட பிறர்நலம் (gendered altruism) பற்றிய இக்கருத்துக்களை சவாலுக்கு உட்படுத்தியுள்ளது. அத்துடன் அது, பராமரிப்பு என்ற விடயத்தை பெண்ணிலைவாத சொற்பொழிவுகளின் மைய மற்றும் நிலையான அங்கமாகவும் வைத்துள்ளது.

பெண்ணிலைவாத ஆய்வுகளும் ஊதியமற்ற பராமரிப்புப் பணி பற்றிய சான்றுகளும் பெண்களின் பொருளாதார வலுவூட்டல், பால்நிலைமயப்படுத்தப்பட்ட அடையாளங்கள் மற்றும் அரசாங்கக் கொள்கையின் வகிபாகம் ஆகியவற்றின் பரிமாணங்களை வெளிக்கொண்டுவந்துள்ளன. அது ஊதியமற்ற பராமரிப்புப் பணியின் அரசியற் பொருளாதாரம், குடும்பத்தினுள் பெண்களின் உழைப்பை மதிப்பிடுவதற்காகவுள்ள கட்டாயத் தேவைப்பாடுகள் என்பவற்றின் அங்கீகாரத்தை வலியுறுத்தியுள்ளது. அது ஊதியம்பெறும் பணியிலுள்ள – ஆனால் அதனைவிட முக்கியமாக தமது குடும்பங்களில் ஊதியமற்ற பராமரிப்புப் பணிகளை முன்னெடுக்கின்ற – பெண்கள்மீது கொவிட்-19 பெருந்தொற்று போன்ற உலகளாவிய நெருக்கடிகளின் தாக்கத்தை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது. ஏனைய பிராந்தியங்களைப் போலவே தெற்காசியாவிலும் ஊதியமற்ற பராமரிப்புப் பணிகளை அங்கீகரித்தல், அங்கீகாரத்துக்கான அளவீடுகளை மேற்கொள்ளல், குறைத்தலும் மீள்விநியோகம் செய்தலும் மற்றும் மீள்விநியோகத்துக்கான அளவீடுகளை மேற்கொள்ளல் ஆகியன பற்றிய பணிகள் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன.

ஊதியம்பெறும் பணியில் பெண்களின் ஈடுபாடு மற்றும் தேசிய தொழிற்படையில் அவர்கள் உள்வாங்கப்படுதல் அத்துடன் குடும்பத்தினுள்ளும் வீட்டினுள்ளும் பெண்களின் உழைப்புப் பற்றிய பொருளாதார மற்றும் சமூகப் பெறுமானம் ஆகிய விடயங்களுக்கிடையே காணப்படும் தொடர்பு பற்றிய தொடர்ச்சியான மீள்பரிசீலனையையும் ஆழமான கருத்துள்ள பகுப்பாய்வுகளையும் ஊதியமற்ற பராமரிப்புப் பணி குறித்து தற்போது இடம்பெற்று வருகின்ற கலந்துரையாடல்களும் விவாதங்களும் உள்ளடக்குகின்றன. குழந்தைப் பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு மற்றும் மாற்றுத்திறனாளிகளைச் சார்ந்துள்ளோருக்கான பராமரிப்பு ஆகியன உள்ளடங்கலான பராமரிப்புச் சேவைகளை வழங்குவதற்கான அவசியத்தை அநேக சர்வதேச அபிவிருத்தி முகவரமைப்புக்கள் தற்போது ஒப்புக்கொண்டுள்ளன. இளம் சிறார்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களைக் கொண்டுள்ள குடும்பங்களுக்கான பராமரிப்பு வசதிகளை வழங்குவதற்குரிய வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் பற்றிய முக்கிய கரிசனையும் காணப்படுகின்றது.

பல தெற்காசிய நாடுகள் தமது வரவுசெலவுத்திட்டங்களில், வறுமையிலுள்ள குடும்பங்களுக்கான சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய ஒதுக்கீடுகளைச் செய்துள்ளன. இருப்பினும், குடும்பத்தில் முதன்மைப் பொறுப்பை வகிக்கும் பெண்களிடத்தில்தான் அக்குடும்பத்தின் பராமரிப்பு உள்ளதெனும் பால்நிலைமயப்படுத்தப்பட்ட ஏற்பாட்டை மறைமுகமாக ஏற்கும் வகையில்தான் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களுள் பல வடிவமைக்கப்பட்டுள்ளன. பெண்களை வருமானமீட்டற் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதன் முக்கியத்துவமும், அவர்கள் தொழிற்படையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டியதன் முக்கியத்துவமும், பெரும்பாலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கான ஒரு நிவாரணியாக முன்வைக்கப்படுகின்றது. அதேவேளை, பால்நிலைசார் வகிபாகங்கள் மற்றும் பால்நிலைசார் தொடர்புகள் பற்றிய கலாசார ரீதியிலான நெறிமுறைகளும் கருத்தேற்புக்களும் ஊதியமற்ற பணியின் உட்பிரிவுகளின் தொடர்ச்சிக்கான காரணங்களாக எடுத்துக்காட்டப்படுகின்றன. பிராந்தியத்திலுள்ள அதி-கமான பெண்கள் தொழிற் படையில் இணைகின்ற படியினால், குடும்பம், சமூகம் மற்றும் தேசியப் பொருளாதாரம் ஆகிய மட்டங்களில் ஊதியமற்ற பராமரிப்புப் பணியின் பெறுமானம் பற்றிய சிறியளவிலான கொள்கைசார் அங்கீகாரமேனும் இன்னும் காணப்படவில்லை. தந்தைமார்களுக்கான மகப்பேற்று லீவு (paternity leave) அல்லது குடும்பங்கள் அணுகக்கூடியதும் சிறந்த வளங்களைக்கொண்டதுமான பராமரிப்பு வசதிகளுக்கான ஏற்பாடு ஆகியன போன்ற அர்த்தபூர்வமான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தலும் நடைமுறைப்படுத்தலும் போன்ற இடையீடுகள், பிராந்தியத்தில் பெரும்பாலான கொள்கை உருவாக்கத்திலிருந்து எழுகின்ற கரிசனைகளுள் சில கரிசனைகளாகும்.

கொவிட்-19 பெருந்தொற்றின் விளைவாக ஏற்பட்ட சமூக மற்றும் பொருளாதார எழுச்சியானது, பெண்கள் சுமக்கின்ற ஊதியமற்ற பராமரிப்புப் பணியின் சுமை எந்தளவுக்கு உள்ளதென்பதை முன்னுரிமைப்படுத்திக் காண்பிக்கின்றது. இக்காரணிகள் உலகளாவிய ரீதியிலும், குறிப்பாக தெற்காசியாவிலும், பெண்ணிலைவாத ஆய்வாளர்களும் செயற்பாட்டாளர்களும் பெண்களின் உழைப்புப் பற்றிய சொற்பொழிவுகளை மீள்பரிசீலனை செய்வதற்கும், ஊதியமற்ற பராமரிப்புப் பணிகளை அங்கீகரிப்பதில் காணப்படும் சமத்துவம் மற்றும் ஒப்புரவு பற்றிய சிக்கல்களை ஆராய்வதற்குமான அவசரத்தை வலுப்படுத்துகின்றது.

**மேலும் தகவல்களுக்கு:** https://womenandmedia.org/conference

பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
56/1, சரசவி ஒழுங்கை, கார்ஸல் வீதி,
கொழும்பு 08. இலங்கை.

UCW.SAconf@gmail.com

womenandmedia.org

ஏற்பாடு: இலங்கையிலுள்ள சமூக விஞ்ஞானிகள் கழகத்தின் ஒத்துழைப்புடன் பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு